மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, நேற்றுகூட இந்த மானியத்தின்மீது பேசும்போது கேரளத்தார் என்று சொன்னார்கள். கேரளத்தார் யாரும் ஆழ் கடலில் மீன்பிடிப்பதற்காகச் சென்று தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் அவர்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்ற தகவல் எங்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. கேரளத்தார் எல்லோரும் நமது மாநிலத்தில் இருப்பவர்கள்தாம். ஆழ்கடலில் மீன்பிடிக்கும் திட்டத்தை நிறைவேற்றும்போது நமது மீனவர்களுக்கு எந்தப் பாதகமும் ஏற்படாத வண்ணம் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன் பிடிக்கும் திட்டம் நிறைவேற்றப்படுமானால், இதன்மூலம் அந்நிய நாடுகளுக்கு நம்முடைய நாட்டிலே கிடைக்கின்ற மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுமா? அப்படியானால் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படும்? எவ்வளவு அந்நியச் செலாவணி கிடைக்கும் என்பதற்கான செயற் குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அந்நிய நாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்வதற்காகத் தான் இந்தத் திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் போதுதான் சரியான குறிப்பு சொல்ல முடியும்.

Fish Canning Industry in Tamil Nadu.

* 424 *Q.*—Thiru A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Fish Canning Industry in this State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே இம்மாதிரி "ஃபிஷ் கானிங் யூனிட்" ஒன்று அமைக்கப்பட்டு லாபகரமாக நடந்துகொண்டு வந்ததை, இரண்டு ஆண்டுக்காலமாக தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதை மீண்டும் அரசே ஏற்று நடத்துமா? இல்லையென்றால் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அதில் நஷ்டம் ஏற்பட்டதற்காகத்தான் தனியாருக்குக் கொடுக்கப்பட்டது. தனியார் துறையிலாவது நல்ல முறையில் நடக்கும் என்பதற்காக முதலிலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. முதலில் அவர்கள் எடுத்த குத்தகை 5,290 ரூபாய். "ஃபிஷ் மீல்" உற்பத்தி செய்வதற்காக மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் அளவிற்குக் கொடுக்கப்பட்டது. அவர்களும் மூலப்பொருள்கள் சரியாகக் கிடைக்கவில்லையென்றும், நஷ்டம் ஏற்படுகிறது என்றும் சொல்லி, படிப்படியே அவர்கள் கொடுத்த குத்தகைத் தொகையை குறைத்துக் கொண்டு வந்தும், கடைசி வரையில் அதை லாபகரமாக நடத்த முடியவில்லை. அதற்காகத்தான் அரசே மீண்டும் எடுத்துக்கொள்வது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.